சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணி நியமனம் – திரு.கி.புகழேந்தி, இளநிலை உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம், விழுப்புரம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (3ப) எண்.07

நாள்: 20.12.2023.
சோபகிருது, மார்கழி–4
திருவள்ளுவராண்டு–2054

படிக்கப்பட்டவை:

1. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது செயல்முறை ந.க. எண்.32823/2012–1/ பி.3, நாள்.31.01.2023
2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது செயல்முறை ந.க. எண்.32823–2/2016/ பி.3, நாள்.12.09.2014.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க.எண்.47513 /2014/பி3 நாள்.01.04.2021, 04.12.2021 மற்றும் 29.05.2023.

******

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஆணையரது கடிதங்களில், இந்து சமய அறநிலையத்துறையில் விழுப்புரம், உதவி ஆணையர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்த திரு.இரா.கிருஷ்ணமேனன் 16.06.1999 அன்று பணியிடையே காலமானார் எனவும், அன்னாரின் மனைவி திருமதி.கி.சரோஜினி அவர்கள் 15.11.1999 நாளிட்ட விண்ணப்பத்தின் மூலம் பணிவேண்டியிருந்தார் எனவும் பின்னர் தனது மூத்த மகன் திரு.கி.மாரியப்பனுக்கு பணி வழங்குமாறு கோரினார் எனவும் அதனைத் தொடர்ந்து திரு.கி.மாரியப்பன் தனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி 13.03.2006 அன்று விண்ணப்பித்ததன்பேரில் திரு.கி.மாரியப்பனை விழுப்புரம் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட ஆணையரது செயல்முறையில் பணி நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது எனவும், இதற்கிடையில், இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.கி.சரோஜினி அவர்கள் தனது மூத்த மகன் திரு.கி.மாரியப்பன் தனது குடும்பத்துடன் வசிக்கவில்லை என தெரிவித்து கருணை அடிப்படையில் வேலையை தனது இரண்டாவது மகனான திரு.கி.புகழேந்தி அவர்களுக்கு மாற்றித்தருமாறு கோரியதாலும், 10.04.2013 நாளிட்ட விண்ணப்பத்தில் திரு.கி.மாரியப்பன் தனது தம்பியான திரு.கி.புகழேந்தி

அவர்களுக்கு பணி நியமனம் வழங்குவதில் எந்த ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவித்ததாலும் திரு.கி.மாரியப்பன் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணி நியமன ஆணை அவர் பணியில் சேர்வதற்கு முன்னர் இரத்து செய்யப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், அரசு ஊழியரின் இரண்டாவது மகன் திரு.கி.புகழேந்தி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி 26.06.2014 அன்று விண்ணப்பித்ததன்பேரில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆணையரது செயல் முறையில் விழுப்புரம், இணை ஆணையர் அலுவலகத்தில் அன்னாரை இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டது எனவும், அரசு ஊழியர் இறந்த நாளில் திரு.கி.புகழேந்தி போதுமான வயது மற்றும் கல்வி தகுதி பெறவில்லை எனவும், எனவே திரு.கி.புகழேந்தி, இளநிலை உதவியாளருக்கு வயது மற்றும் கல்வித் தகுதி குறித்த விதிகளுக்கு விலக்களித்து அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2014 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறு ஆணையர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார். திரு.கி.புகழேந்தி பணி வேண்டி விண்ணப்பித்த நாளில் (26.06.2014) இளநிலை உதவியாளர் பதவிக்கு தேவையான கல்வித்தகுதி, வயது தகுதியினை பெற்றுள்ளார்.

3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், இந்து சமய அறநிலையத்துறை, விழுப்புரம், இணை ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.கி.புகழேந்தி மூன்றாண்டு காலம் கடந்து பணிவேண்டி மாற்று விண்ணப்பம் அளித்துள்ளதால், தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசு குடிமைப்பணி விதிகள் (கருணை அடிப்படையில் பணி நியமனம்) விதிகள் 2023–ல் விதி 9(1)–ஐ தளர்வு செய்து அன்னாரது பணியினை அவர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 29.09.2014 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை மனிதவள மேலாண்மைத்துறையின் மின் கோப்பு எண்.3958/ஜி/2021, நாள்.27.11.2023–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

திரு.கி.புகழேந்தி, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம், விழுப்புரம்.
<u>(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)</u>
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.

<u>நகல்</u>:–

மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், விழுப்புரம்.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. சந்யா
20.12.23
பிரிவு அலுவலர்

20.12.23